www.ecourtsindia.com



COPY OF DEPOSITION

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.

அசல் வழக்கு எண்.83/2012

முதல் விசாரணை வா.சா.1 நாள் 04.04.2024

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ம் தேதி வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.அ.செல்வகுமார், பி.இ., பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜலட்சுமி | ஜாதி | : |
| த/க பெயர் | : | மதம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | தொழில் | : |
| மாவட்டம் | : | வயது | : |

**வா.சா.1 :முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்க கோருகிறேன்.

09.03.2012 ம் தேதியிட்ட என்னுடைய பாட்டி மாரியம்மாள் (எ) முத்தம்மாளின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 08.03.2012 ம் தேதியிட்ட என்னுடைய பாட்டி பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரீசதின் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 29.02.2012 ம் தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எனது வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 01.03.2012 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.4** ஆகவும்,01.03.2012 ம் தேதியில் 2 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.5** ஆகவும், 01.03.2012 ம் தேதியில் 3 ம் பிரதிவாதி அறிவிப்பை



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com



பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.6** ஆகவும், 01.03.2012 ம் தேதியில் 4 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7** ஆகவும், 01.03.2012 ம் தேதியில் 5 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்கிறேன்.

மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

**கற்றறிந்த 3, 11 முதல் 13, 22, 24 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-4.pdf